

இன்றைய செய்தி நாளைய வரலாறு

கலைஞர் 100 1924 - 2024

# முரசொலி

Murasoli

வீழ்வது நாமாக இருப்பினும் வாழ்வது தமிழாக இருக்கட்டும்

www.murasoli.in | நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி | murasolidaily@gmail.com

தொடக்கம் : 10.8.1942 – முரசு : 84 – ஒலி : 354 – திருவள்ளுவர் ஆண்டு 2057 – ஆடி 19 – செவ்வாய்க்கிழமை 04 ஆகஸ்ட் 2026 – மதுரை 10 பக்கங்கள் Established : 10.8.1942 - Volume : 84 - Issue 354 : Thiruvalluvar Year - 2057 - Aadi 19 - Tuesday 04 August 2026 - Madurai 10 Pages ₹ 5.00


## தஞ்சை தரணியில் அலைகடலெனத் திரண்ட கழகத்தினர் - விவசாயிகள்!



### காவிரிப் பிரச்சினை: த.வெ.க. அரசைக் கண்டித்து - தஞ்சையில்

# உதயநிதி ஸ்டாலின் தலைமையில் மாபெரும் ஆர்ப்பாட்டம்!

### பல்லாயிரக்கணக்கில் கழகத்தினர் - விவசாயிகள் திரண்டு கண்டன முழக்கம்!



**தஞ்சை, ஆக. 4-**

**விவசாயக் கடன் முழுமையாக தள்ளுபடி செய்ய வேண்டியும், மேகதாது அணை கட்டுவதை தடுக்க தவறிய த.வெ.க அரசை கண்டித்தும், டெல்டா மாவட்டங்களை வறட்சி மாவட்டங்களாக அறிவிக்க வேண்டியும் த.வெ.க. அரசைக் கண்டித்து திராவிட முன்னேற்றக் கழகம் சார்பில் மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டம் நேற்று (03.08.2026 திங்கட்கிழமை) காலை 10.00 மணியளவில் பனகல் கட்டிடம் அருகில், தஞ்சாவூரில் நடைபெற்றது.**

த.வெ.க. அரசைக் கண்டித்து நடைபெற்ற ஆர்ப்பாட்டத்தில் கழக முதன்மைச் செயலாளர், சட்டமன்ற எதிர்க்கட்சி துணைத் தலைவர் கே.என்.நேரு அவர்கள் வரவேற்புரையாற்றினார்.

ஆர்ப்பாட்டத்திற்கு சட்டமன்ற எதிர்க்கட்சி தலைவர், கழக இளைஞரணி செயலாளர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் தலைமை வகித்தார்.

இந்த ஆர்ப்பாட்டத்தில் தோழமைக்கட்சித் தலைவர்கள் எம்.எச்.ஜவாஹிருல்லா, மு.தமீமுன் அன்சாரி, நெல்லை முபாரக்,

இரா.ஜெயக்குமார், பி.சிவநேசன் தர்ம.சரவணன், ஏ.ஆரோக்கியசாமி ஆகியோர் கண்டன உரையாற்றினர்.

இந்த ஆர்ப்பாட்டத்தில் கழக முன்னணியினர் திருச்சி என்.சிவா, எஸ்.எஸ்.பழநிமாணிக்கம், எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம், எஸ்.கல்யாணசுந்தரம், எஸ்.ரகுபதி, அன்பில் மகேஸ் பொய்யாமொழி, கோவி.செழியன், டி.ஆர்.பி.ராஜா, ஆர்.வைத்திலிங்கம், செ.இராமலிங்கம், எஸ்.எஸ்.சிவசங்கர், சிவ.வீ.மெய்யநாதன், சி.வெ.கணேசன், ஏ.கே.எஸ்.விஜயன், அன்னியூர் ஏ.சிவா, உ.மதிவாணன்,

எம்.பி.க்கள் ச.முரசொலி, கே.என்.அருண்நேரு, கவிஞர் சல்மா,

மாவட்டச் செயலாளர்கள் பூண்டி கே.கலைவாணன், சாக்கோட்டை க.அன்பழகன், காடுவெட்டி ந.தியாகராஜன், க.வைரமணி, நிவேதா எம்.முருகன், என்.கௌதமன், கே.கே.செல்லபாண்டியன், டி.பழனிவேல், முன்னாள் இன்னாள் சட்டமன்ற உறுப்பினர்கள், தலைமைக் கழக நிர்வாகிகள் கா.அண்ணா துரை, என்.அசோக்குமார், ஏனாதி ப.பாலசுப்பிரமணி யன், சீ.கதிரவன், எம்.செந்தில்செல்வன், வை.முத்துராஜா, எம்.ரெங்கசாமி, து.செல்வம், எம்.இராமச்சந்திரன், டி.கே.ஜி.நீலமேகம், கே.டி.மகேஷ்கிருஷ்ணசாமி, சி.இறைவன், த.காரல் மார்க்ஸ், குட்டி இரா.தெட்சிணாமூர்த்தி, சண்.இராமநாதன், டாக்டர்.அஞ்சுகம்பூபதி, சுப.தமிழழகன், ஆடுதுறை மு.உத்திராபதி, இராம.விஜயன், பழஞ்சூர் கே.செல்வம், வீ.ஜெயபிரகாஷ், கார்த்திகேயன்வேலுச்சாமி,

விவசாய சங்க நிர்வாகிகள் காவிரி வி.தனபால், கே.வி.இளங்கீரன், பூரா.விஸ்வநாதன், சுக்கரை ஆர்.சுகுமாறன், பி.கே.தெய்வசிகாமணி, என்.பழனியப்பன், கோபி.கணேசன், ஜி.எஸ்.தனபதி, பி.ராமசாமி, பி.கோவிந்தராஜ், கே.எஸ்.முஹமது இப்ராஹீம்,

விவசாய அணி, விவசாய தொழிலாளர் அணி நிர்வாகிகள் சு.சின்னையன், பி.ரவிச்சந்திரன், வை.வினோத்குமார், கரம்பயம்ஏ.ஆனந்த்,க.சுப்பிரமணியன், க.அன்பழகன், எஸ்.டி.சேது, அடைக்கலம் செல்லமுத்து, என்.கருப்பையா, கோ.ரமேஷ், ஏ.ஜெகதீசன், கோ.வி.நாகராஜன் பி.எம்.கே. குறிச்சிமன்னன், எஸ்.பால்ராஜ், ஆர்.துரைராஜ், கொண்டல் இரா. முருகன், திருமணஞ்சேரி இரா.மனோகரன், க.தர்மதுரை, என்.ஆர்.ராமதுரை, பொன்.பாரிவள்ளள், சி.அரங்கநாயகம், ஆர்.சிவக்குமார், ஏ.சேகர், பூ.மதியழகன், பொன்.பன்னீர், ம.ராமசாமி உள்ளிட்ட விவசாய பெருங்குடி மக்கள், கூட்டணி கட்சி நிர்வாகிகள், விவசாய சங்க பிரதிநிதிகள், முன்னாள் அமைச்சர்கள், முன்னாள், இன்னாள் நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள், மாவட்ட, மாநகர, நகர, ஒன்றிய, பேரூர், வட்ட, கிளை கழக நிர்வாகிகள், சார்பு அணி நிர்வாகிகள், முன்னாள், இன்னாள் உள்ளாட்சி பிரதிநிதிகள், கழக முன்னோடிகள் மற்றும் கழகத் தோழர்கள், பொதுமக்கள் பல்லாயிரக்கணக்கில் திரண்டு கண்டன முழக்கமிட்டனர்.

தஞ்சை மத்திய மாவட்டச் செயலாளர் துரை. சந்திரசேகரன் எம்.எல்.ஏ. நன்றி கூறினார்.